நாள். 19.11.2024

MC. No. 02/2023

ம.சா.1

திருமதி.மாதம்மாள்

க/பெ. நாகராஜ்

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**குறுக்கு விசாரணை**

1. எனக்கு பெங்களூர் ராஜ ராஜேஷ்வரி கோவிலில் திருமணம் நடந்தது. நானும், 1 ம் எதிர்மனுதாரரும் காதல் திருமணம் செய்துக்கொண்டோம் என்றால் சரிதான். எங்களது திருமணத்திற்கு இருதரப்பு பெற்றோர்களும் வரவில்லை என்றால் சரிதான். 1 ம் எதிர்மனுதாரர் / கணவர் ஊனமுற்றவர் என்றால் சரிதான். அவர் எந்த வேலைக்கும் செல்லாமல் வீட்டில் தான் உள்ளார் என்றால் சரிதான். 2 ம் எதிர்மனுதாரர் இராணுவத்தில் வேலை பார்த்தபோது குண்டடி பட்டு இராணுவத்திற்கு செல்லாமல் வீட்டிலேயே இருந்து வருகிறார் என்றால் சரிதான். உடல்நலக்குறைவு காரணமாக 2 ம் எதிர்மனுதாரர் சிகிச்சை பெற்று வருகிறார் என்றால் சரிதான். நலமுடன் தான் உள்ளார்.

2. எனக்கு ஒரு மகள், ஒரு மகன். எனது மகளுக்கு திருமணமாகிவிட்டது என்றால் சரிதான். எனது மகளின் வீட்டிற்கு நான் செல்வதில்லை. நான் தற்போது எனது அக்காவின் பாதுகாப்பில் அவரது வீட்டில் இருந்து வருகிறேன். எனது மகன், மகள், கணவர் ஆகிய அனைவரும் ஒன்றாகத்தான் உள்ளார்கள் என்றால் சரிதான். நான் மட்டும் குடும்பத்தை விட்டு தனியாக பிரிந்து வாழ்கிறேன் என்றால் சரிதான். எங்களது உறவுக்காரர்கள் என்னை எதிர்மனுதாரர்களுடன் சேர்ந்து வாழுமாறு அறிவுறுத்தினார்கள் என்றால் சரிதான். ஆனால் நான் எதிர்மனுதாரர்களுடன் தற்போது வரை சேர்ந்து வாழவில்லை என்றால் சரிதான்.

3. நான் வட்டிக்கு பணம் கடனாக கொடுக்கும் பழக்கமுண்டு என்றால் சரியல்ல. நான் வெளிநபர்கள் பலருக்கு வட்டிக்கு பணம் கொடுத்திருந்த நிலையில் எனக்கெதிராக கடனாளி மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் IP NO. 07/2023 வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. நான் கடன் கொடுத்த கடனாளிகள் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருந்தேன் என்றால் சரியல்ல. நாளது தேதி வரை நான் வட்டிக்கு பணம் கொடுத்து மாதம் ஒன்றுக்கு ரூ.100000/- சம்பாதித்து வருகிறேன்

என்றால் சரியல்ல. எனது கணவர் ஊனமுற்ற நிலையில் எந்த வேலைக்கும் செல்வதில்லை என்றால் சரிதான். எனது மகன் இராணுவத்திலிருந்த disability காரணமாக திரும்ப அனுப்பப்பட்டு எந்த வேலைக்கும் செல்வதில்லை என்றால் சரியல்ல. எனது மகன் ரேசன் கடைக்கு வேலைக்கு போகிறார். எனது கணவர் அரசிடமிருந்து மாதம் ரூ.2000/– தொகை பெற்று ஜீவனம் செய்து வருகிறார் என்றால் சரிதான்.

4. இரண்டாம் எதிர்மனுதாரர் எந்த வேலைக்கும் செல்லவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு வேலைக்கு சென்றிருந்தால் அதற்குண்டான ஆவணத்தை தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. எனது மகன் ரேசன் கடையில் கவர்மென்ட் போஸ்டிங்கில் தான் வேலை பார்ப்பதாக சாட்சி தானாக கூறுகிறார். எனது வங்கி கணக்கில் பல லட்சங்களுக்கு பணபரிவர்த்தனையானது நாளது தேதி வரை நடந்து வருகிறது என்றால் சரியல்ல. எனது வங்கி கணக்கு விபரப்பட்டியலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன்.

5. எனது மகன் இராணுவத்தில் பணிபுரிந்த சமயத்தில் சம்பாதித்த பணத்தை என்னிடம் கொடுத்து வைத்திருந்தார் என்றால் சரியல்ல. அந்த பணத்தை தான் நான் சேர்த்து வைத்து எதிர்மனுதாரர்களை விட்டு பிரிந்து சென்று வட்டிக்கு கொடுத்து வாழ்ந்து வருகிறேன் என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரர் கொண்டு வந்த பணத்தை எனது அக்காவிடம் கொடுத்து வைத்துள்ளேன் என்றால் சரியல்ல.என்னிடம் காட்டப்படும்புகாரில் உள்ள கையொப்பம் நான் பல்வேறு நபர்கள் மீது பல்வேறு காவல் நிலையத்தில் கடனை திரும்ப தரவேண்டி தாக்கல் செய்தது என்றால் சரியல்ல.

**எதிர்மனுதாரர் தரப்பில் Ip நகலை பெறவேண்டி காலஅவகாசம் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணையானது ஒத்திவைக்கப்படுகிறது.**